


ஸ்ரீ ஶனீஶ்வரனாலே செய்யப்பட்ட ரக்ஷோபுவ

# ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஸ்துதி


ஸ்ரீ கருடாழ்வார்
ஸ்ரீ மந் நிகமாந்தமஹா தேசிகன்

ஸ்ரீ ஶனீஶ்வரனாலே செய்யப்பட்ட
ரக்ஷோபுவன

# ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஸ்துதி





ஸ்ரீ லக்ஷ்மீஸரஸ் மாருதி


## ஸ்ரீ லக்ஷ்மீ ஸரஸ் மாருதி ட்ரஸ்ட்

ராமகிருஷ்ணா நகர், புதுச்சேரி-3.

Phone : 0413 - 2260096

# ஸ்ரீ ஶனீஶ்வரனாலே செய்யப்பட்ட ரக்ஷோபுவன ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஸ்துதி

ரக்ஷோபுவனம் என்பது குஜராத் மாநிலத்திலுள்ள புண்ய க்ஷேத்ரமாகும். பவிஷ்யோத்தர புராணத்தில் இந்த க்ஷேத்ரத்தின் மஹிமை விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. இங்கு புராண ப்ரஸித்தமாக ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஸ்வாமி எழுந்தருளி-யிருந்ததாகவும் இந்த ஸ்வாமியைக் குறித்து ஶனி பகவான் ந்ருஸிம்ஹ பீஜாக்ஷரங்களை உள்ளடக்கி எட்டு ஶ்லோகங்களால் ப்ரார்த்தித்ததாகவும், இந்த ஸ்தோத்ரத்தின் முதல் இரண்டு ஶ்லோகங்களால் பக்தவத்ஸலனான ப்ரபு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் பக்தர்களின் தஶா புத்திகளால் ஏற்படும் கஷ்டங்களை ஸுலபமாகப் போக்குவதில் ஸமர்த்தன் என்றும், அப்பழுக்கற்ற மனத்தையுடைய ஶனீஶ்வரன் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவடித் தாமரைகளை ஸாஷ்டாங்கமாக தெண்டனிட்டுத் துதிக்கிறான் என்றும் கூறப்படுகிறது.

அடுத்துவரும் எட்டு ஶ்லோகங்களில் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனின் பெருமைகளைக் கூறி, “அப்பேர்பட்ட ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனே! க்ருபையுடன் கூடிய தங்களின் கடைக்கண் கடாக்ஷத்தை அடியேனுக்கு நல்குவீராக” என்று ஶனி பகவான் ப்ரார்த்திப்பதாக அமைந்துள்ளது.

இவ்வாறாக ஶனீஸ்வரனால் ஸ்தோத்தரிக்கப்பட்ட ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன், மிகவும் ஸந்தோஷமடைந்து ஶனீஸ்வரனிடம், “அனைத்துலகத்துக்கும் ஹிதத்தைக்

கொடுக்கக் கூடியதும், நீ விரும்புவதுமான வரத்தைக் கேட்பாயாக" என்று அருள, ஶனீஸ்வரனும் "எனது கிழமை தங்களுக்கு ப்ரீதியைக் கொடுக்கக் கூடியதாகவும், இந்த ஸ்தோத்ரத்தை எவர் பக்தியுடன் படிக்கவோ, கேட்கவோ செய்கிறார்களோ, அவர்களுக்கு ஸர்வாபீஷ்டங்களையும் நல்க வேண்டும்" என்றும் ப்ரார்த்திக்க, பக்த வத்ஸலனான ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன், "என்னைக் குறித்து உன்னால் செய்யப்பட்ட இந்த ஸ்தோத்ரத்தை யார் படிக்கவோ, கேட்கவோ செய்கின்றனரோ, அவர்களுக்கு த்வாதஶ, அஷ்டம, ஜன்ம ஶனியால் ஏற்படும் எவ்வித கஷ்டமும் உண்டாகாத வகையில் நடந்துகொள்" என்று அருள்கிறார்.

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ-ஶனீஶ்வர ஸம்வாதமாகிய இந்த ஸ்தோத்ரத்தை எவர் பக்தியுடன் படிக்கவோ, கேட்கவோ செய்கின்றார்களோ அவர்களுக்கு ஸர்வாபீஷ்டங்களும் உண்டாகும் என்று ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா தர்மராஜனிடம் உபதேசிப்பதாகப் புராணம் கூறுகின்றது.

ஆஸ்திக அன்பர்கள் இந்த ஸ்தோத்ரங்களைப் பாராயணம் செய்தும், கேட்டும் பயன் பெறுவார்களாக !

ஈச்வரன், சக்தி, சாந்தி, சேஷன், சோபனம்.... முதலான வார்த்தைகளில் "ச" எழுத்தை எவ்வாறு உச்சரிக்க வேண்டுமோ அவ்வாறு ஶ், ஶ, ஶா, ஶே, ஶோ.... எழுத்துக்களை உச்சரிக்க வேண்டும்.

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவடிகளே ஶரணம்

- ஸ்ரீமதி விஷ்ணுப்ரியா சாரி

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## ஸ்ரீ ஶநைஶ்சர க்ருத

# ஸ்ரீந்ருஸிம்ஹ ஸ்துதி:

ஶூலபோ4 ப4க்தியுக்தாநாம் து3ர்த3ர்ஶோ
து3ஷ்டசேதஸாம்|
அநந்யக3திகாநாம் ச ப்ரபு4ர்ப4க்தைக வத்ஸல:|| 1

ஶநைஶ்சரஸ்தத்ர ந்ருஸிம்ஹதே3வ-
ஸ்துதிம் சகாராமல சித்தவ்ருத்தி: |
ப்ரணம்ய ஸாஷ்டாங்க3ம் அஶேஷலோக
கிரீட நீராஜித பாத3பத்3மம் || 2

ஸ்ரீ ஶநிருவாச
யத்பாத3 பங்கஜரஜ: பரமாத3ரேண
ஸம்ஸேவிதம் ஸகலகல்மஷ ராஶிநாஶம் |
கல்யாணகாரகம் அஶேஷ நிஜாநுகா3நாம்
ஸ த்வம் ந்ருஸிம்ஹ மயி தே3ஹி
க்ருபாவலோகம் || 3

ஸர்வத்ர சஞ்சலதயா ஸ்தி2தயா ஹி லக்ஷ்ம்யா
ப்3ரஹ்மாதி3வந்த்3ய பத3யா ஸ்தி2ரயாந்ய ஸேவி
பாதா3ரவிந்த3யுக3லம் பரமாத3ரேண
ஸ த்வம் ந்ருஸிம்ஹ மயி தே3ஹி
க்ருபாவலோகம் || 4

யத்3ரூபம் ஆக3மஶிர: ப்ரதிபாத்3யமாத்3யம்
ஆத்4யாத்மிகாதி3 பரிதாபஹரம் விசிந்த்யம் |
யோகீ3 ஶ்வரை ரபக3தாகி2ல தோ3ஷ ஸங்கை4:
ஸ த்வம் ந்ருஸிம்ஹ மயி தே3ஹி
க்ருபாவலோகம் || 5

ப்ரஹ்லாத3 ப4க்தவசஸா ஹரிரா விராஸ
ஸ்தம்பே4 ஹிரண்யகஶிபும் ய உதா3ரபா4வ: |
ஊர்வோ நிதா4ய தது3ரோ நக2ரைர் த3தா3ர
ஸ த்வம் ந்ருஸிம்ஹ மயி தே3ஹி
க்ருபாவலோகம் || 6

யோ நைஜப4க்தம் அநலாம்பு3தி4 பூ4த4ரோக்3ர-
ஶ்ருங்க3ப்ரபாத விஷத3ந்தி ஸரீஸ்ருபேப்4ய: |
ஸர்வாத்மக: பரமகாருணிகோ ரரக்ஷ
ஸ த்வம் ந்ருஸிம்ஹ மயி தே3ஹி
க்ருபாவலோகம் || 7

யந்நிர்விகார பரரூப விசிந்தநேந
யோகீ3ஶ்வரா விஷயவீத ஸமஸ்தராகா3: |
விஶ்ராந்திமாபுர விநாஶவதீம் பராக்2யாம்
ஸ த்வம் ந்ருஸிம்ஹ மயி தே3ஹி
க்ருபாவலோகம் || 8

யத்3ரூபமுக்3ர பரிமர்த3ந பா4வஶாலி
ஸஞ்சிந்தநேந ஸகலாக4 விநாஶகாரி |
பூ4த ஜ்வர க்3ரஹ ஸமுத்3ப4வ பீ4திநாஶம்
ஸ த்வம் ந்ருஸிம்ஹ மயி தே3ஹி
க்ருபாவலோகம் || 9

யஸ்யோத்தமம் யஶ உமாபதி பத்3மஜந்ம
ஶக்ராதி3 தை3வத ஸப4ாஸு ஸமஸ்த கீ3தம்
ஶக்த்யைவ ஸர்வஶமல ப்ரஶமைக த3க்ஷம்
ஸ த்வம் ந்ருஸிம்ஹ மயி தே3ஹி
க்ருபாவலோகம் || 10

இத்த2ம் ஶ்ருத்வா ஸ்துதிம் தே3வ: ஶநிநா
கல்பிதாம் ஹரி: |
உவாச ப்3ரஹ்ம வ்ருந்த3ஸ்த2ம் ஶநிம் தம்
ப4க்தவத்ஸல: || 11

## ஶ்ரீ ந்ருஸிம்ஹ உவாச :

ப்ரஸந்நோஹம் ஶநே துப்4யம் வரம் வரய
ஶோப4நம் |
யம் வாஞ்ச2ஸி தமேவ த்வம் ஸர்வலோக
ஹிதாவஹம் || 12

## ஶ்ரீ ஶநிருவாச :

ந்ருஸிம்ஹ த்வம் மயி க்ருபாம் குரு தே3வ
த3யாநிதே4 |
மத்3வாஸரஸ்தவ ப்ரீதிகர: ஸ்யாத்3தே3வதா பதே ||
13

மத்க்ருதம் த்வத்பரம் ஸ்தோத்ரம் ஶ்ருண்வந்தி ச
பட2ந்தி ச |
ஸர்வாந் காமாந் பூரயேத2ா: தேஷாம் த்வம்
லோகப4ாவந || 14

ஸ்ரீ ந்ருஸிம்ஹ உவாச :

ததை2வாஸ்து ஶநேऽஹம் வை ரக்ஷோபு4வந
ஸம்ஸ்தி2த: |
ப4க்த காமாந் பூரயிஷ்யே த்வம் மமைகம்
வச: ஶ்ருணு || 15

த்வத் க்ருதம் மத்பரம் ஸ்தோத்ரம் ய:
படேத் ஶ்ருணுயாச்ச ய: |
த்3வாத3ஶாஷ்டம ஜ்ந்மஸ்த2ாத் த்வத்3ப4யம்
மாஸ்து தஸ்ய வை || 16

ஶநிர்நரஹரிம் தே3வம் ததே2தி ப்ரத்யுவாச ஹ |
தத: பரமஸந்துஷ்டா: ஜயேதி முநயோவத3ந் || 17

ஸ்ரீ க்ருஷ்ண உவாச : (தர்மராஜனிடம்)

இத3ம் ஶநைஶ்சரஸ்யாத2 ந்ருஸிம்ஹதே3வ
ஸம்வாத3மேதத் ஸ்தவநம் ச மாநவ: |
ஶ்ருணோதி ய: ஶ்ராவயதே ச ப4க்த்யா
ஸர்வாண் யபீ4ஷ்டாநி ச விந்த3தே த்4ருவம் ||18

|| இதி ஸ்ரீ ஶநைஶ்சர க்ருத
ஸ்ரீந்ருஸிம்ஹஸ்துதி: ஸமாப்தா ||



# ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஸ்துதி
## எளிய விளக்கவுரை

1. ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரபு தன் பக்தர்களுக்கு மிகவும் ஸுலபமானவன். எளிதில் அண்டப்படுபவன். தீயவர்களை தண்டிப்பவன். தீனர்களுக்கு அவனே புகல். தன்னைச் சரணடைந்தவர்களுக்கு வாத்ஸல்யத்தைச் சுரக்கும் பக்தவத்ஸலன்.

2. தன் பாத கமலங்களை ஸாஷ்டாங்கமாகப் பற்றி வணங்கி நிற்கும் முப்பத்து முக்கோடி தேவர்கள், மருத்கணங்களின் கிரீடத்திலிருந்து எழும் ரத்தினங்களின் ஒரு ஒளி, ஸ்ரீ ந்ருஸிம்ஹனின் பாத கமல நகங்களில் பிரதிபலித்து, ஜ்யோதிமயமான தீபங்கள் எம்பெருமான் திருமுன் ஏற்றிவைக்கப்பட்டு அசைவதுபோன்ற தோற்றத்தை உருவாக்க அத்தகைய ஸ்ரீ ந்ருஸிம்ஹனின் பாதாரவிந்தகளில் ஸ்ரீ ஶனீஶ்வரன் பணிந்து இவ்வாறு துதிக்கிறான்.

3. நின் பாத கமலமன்றி பிறிதோர் மேம்பட்ட புகலொன்று இல்லையென உணர்ந்து, இதய பூர்வமான மரியாதையுடன், நின் பாத தூளிகளைச் சரணாகப் பற்றியபின் அடியேன் பக்கலிலுள்ள தடைகள் யாவும் முற்றிலும் நீங்கி கல்யாண காரகமாய் திகழ்கின்றது. இத்தகு மேன்மையையும், ஏற்றமும் கொண்ட திருவடித் தாமரைகளையுடைய தாங்கள், அடியேன்பால் கருணா ப்ரவாஹமான தங்கள் கடைக்கண் திருநோக்கைச் சாற்றியருள வேண்டும்.

4. "சஞ்சலா" என்றே பெயர்பெற்று, ஒரே இடத்தில் நிலையாய் நில்லாமல் இருக்கும்

ஸ்ரீ மஹாலக்ஷ்மீயோ, தங்களுடைய திருமார்பில் இறைப்பொழுதும் அகலகில்லாதவளாக கொலுவீற்றிருக்கிறாள். ப்ரஹ்மாதி தேவர்கள் என்றென்றும் மனமுவந்து நிலையான ஈடுபாட்டுடன் நின் திருவடிகளையே பற்றி நிற்கின்றனர். உயர்வற உயர்நலம் உடைய தாங்கள் அடியேன் மீது கருணா பூரிதமான கடைக்கண் கடாக்ஷத்தை நல்கியருள வேண்டும்.

5. நரமும் (மனுஷ்யனும்) சிங்கமும் கலந்த நின் விஶிஷ்டமான திவ்ய ஸ்வரூபம் ஆகம விதிகளின் தலையாய ப்ரதிபாத்யமாகக் கொண்டாடும் வகையில் ஏற்றம் பெற்றுத் திகழ்கின்றது. ஜீவகோடிகளின் ஆத்மா உய்வடைவதற்கு விரோதமாக எழும் பாபக் கூட்டங்களாகிய தளைகளால் ஏற்படும் கவலைகளை அறவே போக்கியருளும் ஒப்பற்ற தன்மையும், யோக நிலையில் தோஷக்கலப்பற்ற உச்ச நிலையும் யோகீஶ்வரனான நின்னுடையது. இத்தகைய மேன்மை பொருந்திய நின் க்ருபாகடாக்ஷ கடைக்கண் நோக்கை புகலொன்றில்லாத தீனனான அடியேன்பால் சாற்றியருள வேண்டும்.

6. ப்ரஹ்லாதனெனும் பரம பக்தன் பொருட்டு அவதரித்தருளிய ஸ்ரீஹரியான தாங்கள், ஹிரண்ய கசிபு எனும் அசுரன் வீட்டு கல்தூணிலிருந்தே தோன்றி, நின் எளிமையைக் காட்டியருளினீர். நின் பரந்து நிற்கும் கருணையும், பெருந்தன்மையும் நிரூபிக்கப்பட்ட ஒன்றே ! பரந்த உலகங்களும், அவற்றில் திகழும் பொருட்கள் யாவுமே தங்களை எஜமானனாகக் கொண்டவை. ஆயினும் நின் திவ்ய ஸங்கல்பத்தால், நின் திருநகங்களைக் கொண்டே மஹாஸுரனை வதைத்துவிட்டீர். இப்படிப்பட்ட

உயர்வற உயர்ந்த தன்மையுடைய தாங்கள், கருணையுடன், புகலொன்றில்லாத அடியேன் மீது திவ்ய கடைக்கண் கடாக்ஷம் சாற்றியருள வேண்டும்.

7. நின் பரமபக்தனான ப்ரஹ்லாதனை தஹிக்கும் தீயினின்றும், ஆழ்கடலினின்றும், மலையுச்சியிலிருந்து தள்ளப்பட்டபோதும், கொடிய விஷத்தினின்றும், மதங்கொண்ட யானையிடமிருந்தும், நஞ்சுடை நாகங்களின்றும் காப்பாற்றினீர்கள். தாங்களே எங்கும், எதிலும் வ்யாபித்திருக்கும் கருணாமூர்த்தி. பரம தயாளு. அப்பேர்பட்ட தன்மை கொண்ட தங்களின் கருணையான கடைக்கண் பார்வை அடியேன்மீது படிவதாக !

8. நின் பரதத்வ ஸ்வரூபம் நிர்விகாரமானது, மாறுதலுக்கு அப்பாற்பட்டது. ஐம்புலன்களின் ஈர்ப்புகள் அற்ற, ஸுகத்தில் நாட்டம் இவை துளியும் ஸம்பந்தமற்ற, யோக ஸ்வரூபம் உங்களுடையது. நின் திருவடிகளை அடைவது அல்லாத ஏனைய லயிப்புகளில் ஈடுபடுவதை அறவே போக்கி ஸத்வகுணம் மேலோங்கச் செய்வது நின் யோகஸ்வரூபம். இந்த ரூபமே யோகிகள், முனிபுங்கவர்களை இகலோக தளைகளிலிருந்து மீட்டு அந்தமில்லா பேரின்பமான முக்தியை தரவல்லதாயிருக்கிறது. அப்பேர்பட்ட குணவிஶேஷம் கொண்ட நின் கடைக்கண் திருநோக்கை அடியேனுக்கு கருணையுடன் அருள்வதாக.

9. நரசிங்க ரூபம் கொண்ட நின் திவ்ய ஸ்வரூபம் உக்ரத்தன்மை கொண்ட அடியேனின் துரிதங்களை அழிக்கும் ஶக்தி உடையது. ஸகலவித கொடும்

பாவங்களையும் நசித்துவிடும் தன்மையது. பூதம், ஜ்வரம், க்ரஹபீடை இவைகளால் ஏற்படக்கூடிய அச்சத்தை அறவே போக்கடிக்கும் தன்மையது. அத்தகைய ஏற்றமுடைத்தான நின் கருணாபூரித ஸ்பாவமும் கடைக்கண் நோக்கும் அடியேன் மீது க்ருபை பொழிவதாகுக.

10. உத்தமோத்தமமான நின் வைபவங்களை, குணாதிசயங்களை சிவ, பிரம்ம, இந்திராதி அனைத்து லோகங்களும் பாடித் துதிக்கின்றன. நின் திவ்ய தகுதி எல்லாவித தீய ஶக்திகளையும் சமனப்படுத்தக் கூடியது. இவ்வித திவ்ய ஶக்தி படைத்த நின் கடைக்கண் திருநோக்கை கருணையுடன் கூடி அடியேன் மீது சாற்றுவதாக.

## பலஶ்ருதி :

இவ்வாறு ஶனி பகவானால் துதிக்கப்பெற்ற ஸ்ரீ ந்ருஸிம்ஹன், அகமகிழ்ந்து ஶனீஶ்வரனிடம், ''உன் துதியைக்கேட்டு நான் திருவுள்ளம் உகக்கின்றேன். உலக க்ஷேமத்தை முன்னிட்டு நீ கேட்கும் வரத்தை உனக்குத் தந்தருள்கின்றேன்" என்று கூறியருளினார்.

## ஶனீஶ்வர உவாச :

"தயாநிதியான ஸ்ரீ ந்ருஸிம்ஹ! அடியேனை அண்டியவர்களுக்கு, கருணையுடன் தாங்கள் வரமருளவேண்டும். அடியேன் இயற்றிய இந்த துதியை கேட்பவர்கள், படிப்பவர்கள் மனோரதங்களை (விருப்பங்களை) பூர்த்தி செய்து வைக்கவேண்டும். உலகத்தை உய்விக்கும் தேவரீர் இந்த ப்ரார்த்தனையை திருவுள்ளம் பற்ற வேண்டும்."

## ந்ருஸிம்ஹ உவாச :

இதைக் கேட்ட ஸ்ரீ ந்ருஸிம்ஹ பகவான், ''ரக்ஷோபுவன க்ஷேத்ரத்தில் உனக்காக எழுந்தருளியுள்ள நான், பக்தர்களின் அபீஷ்டங்களை (கோரும் பலன்களை) நிறைவேற்றி வைக்கின்றேன். மேலும், என் வார்த்தைகளைக் கேள்! என் விஷயமாக இயற்றிய இந்த துதியை கேட்போருக்கும், படிப்போர்க்கும், அவர்களுடைய ஜாதக ரீதியாக பன்னிரண்டு, எட்டாம், ஜன்ம, ராசிகளில் ஸஞ்சரிக்கும் காலங்களில் உன் ஶாரத்தால், அவர்களுக்கு உன்மீது அச்சம் துளியும் ஏற்படாத வகையில் நடந்து கொள்!"

ஶனீஶ்வரன் ஸ்ரீ ந்ருஸிம்ஹனின் ஆணையை ஶிரம் மேற்கொண்டு பின்பற்றுவதாக பதிலிறுக்க அங்கு கூடியிருந்த முனிவர்களும், யோகிகளும் ஸந்தோஷமடைந்து "ஜய" "ஜய" என்று கோஷித்தார்கள்.

## ஸ்ரீ க்ருஷ்ண உவாச : (தர்மராஜனிடம்)

"ஸ்ரீ ஶனீஶ்வர – ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஸம்வாதமாகிய துதிரூபமான இந்த ஸ்தோத்ரத்தை எவர் பக்தியுடன் கேட்கவோ, துதிக்கவோ செய்கின்றனரோ அவர்கள் ஸர்வாபீஷ்டமும் பெற்று இன்புறுவர் என்பது உறுதி."

இதுவே ஸ்ரீ க்ருஷ்ணன் திருவாய் மலர்ந்தருளிய அமுதவாக்கு. ஸ்ரீ க்ருஷ்ணனின் அருளுரையையேற்று, இந்த ஸ்துதியை தவறாது அநுஸந்தித்து, ஸ்ரீ க்ருஷ்ண, ஸ்ரீ ந்ருஸிம்ஹ அநுக்ரஹத்தைப் பூரணமாக பெற்றிடுவோமாக.

ஸ்ரீ பவிஷ்யோத்தர புராண ரக்ஷோபுவன மஹாத்ம்யத்தில் உள்ள
ஸ்ரீ ஶனைஶ்சர க்ருத ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஸ்துதி ஸம்பூர்ணம்.



## பட்ட அழகியசிங்கர் விஷயமான தனியன்

ஸ்ரீவாஸ வீரரகுவர்ய பராங்குஶாதி
ராமாநுஜார்யமுநிபிர் குருஸார்வ பௌமை: |
ஸம்ப்ரேக்ஷிதம் கருணயா பர்பூர்ணபோதம்
ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதிஶேகர மாஶ்ரயாம: ||

ch15 | 9840 290 883


நவ
பானக ஸந்நிதி
ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவ
பெருமாள் திருக்கோயில்
ராமகிருஷ்ணா நகர்,
புதுச்சேரி-3
ஜ்வாலா ந்ருஸிம்ஹர்
அஹோபில ந்ருஸிம்ஹர்
பாநக ந்ருஸிம்ஹர்
க்ரோட ந்ருஸிம்ஹர்
பாவந ந்ருஸிம்ஹர்
மாலோல ந்ருஸிம்ஹர்
காரஞ்ச ந்ருஸிம்ஹர்
சத்ரவட ந்ருஸிம்ஹர்
யோகாநந்த ந்ருஸிம்ஹர்
பார்கவ ந்ருஸிம்ஹர்
Printed by: Sri Mahalakshmi & Co., Ch-33. Mobile: 9444158817